கனகதாரா ஸ்தோத்திரம்



3/4

கனகதாரா ஸ்தோத்திரம்

(மூலமும், தெளிவுரையும்)

தொகுப்பாசிரியர் :

இரா. இளையபெருமாள்

சகுந்தலை நிலையம்

சகுந்தலை நிலையம்
18, (171), பவளக்காரத் தெரு,
மண்ணடி, சென்னை - 600 001.
போன் : 25250092

நூல் விவரப் பட்டியல்

நூலின் பெயர்	:	கனகதாரா ஸ்தோத்திரம்
தொகுப்பாசிரியர்	:	இரா. இளையபெருமாள்
மொழி	:	தமிழ்
பதிப்பு ஆண்டு	:	முதல் பதிப்பு - மார்ச், 2011
பதிப்புரிமை	:	© சகுந்தலை நிலையம்
தாள்	:	11.6 வெள்ளைத் தாள்
நூல் அளவு	:	12.5 x 18 செ.மீ.
எழுத்து	:	12 புள்ளிகள்
பக்கங்கள்	:	40
பைண்டிங்	:	சாதாரணக் கட்டு
விலை	:	ரூ. 15.00
ஒளி அச்சு	:	விக்னேஷ்வர் கிராபிக்ஸ் சென்னை - 600 005.
அச்சிட்டோர்	:	கணபதி பிராசஸ் சென்னை - 600 014.
நூல் வெளியீடு	:	சகுந்தலை நிலையம் சென்னை - 600 001.

முன்னுரை

ஒப்புயர்வற்ற இந்துமதத்தின் பெருமைகளை உலகெங்கும் பரப்புவதற்கென, தென்னகத்து மண்ணில் காலடியில் தோன்றிய புனிதப் பேரொளியாம் ஆதிசங்கரர் அருளிய அருளமுதத் துளிகளுள் கனகதாரா ஸ்தோத்திரமும் ஒன்றாகும்.

இளம் வயதில் துறவியான ஆதிசங்கரர் வழக்கம்போல பிட்சை ஏற்கச் சென்ற பொழுது சோமதேவர் என்னும் உத்தமர் வீட்டின் முன் நின்று குரல் கொடுத்தார். சோமதேவர் வீட்டில் இல்லாததால் அவரது மனைவி யார், பாலசங்கரரைக் கண்டுவிட்டு, அவருக்குப் பிட்சையிடத் தம் இல்லத்தில் எதுவுமில்லையே என்றெண்ணி மிக வருந்தினார்.

எனவே, இளம் சங்கரரின் திருமுன்பு சென்று நின்று அவரது திருவடிகளில் விழுந்து "சுவாமி! தாங்கள் என்னை மன்னித்தருள வேண்டும். ஏனெனில், தங்களுக்குப் பிட்சையிடும் அளவில் என் இல்லத்தில் எதுவுமில்லாத நிலையில் துயரத்துடன் நிற்கிறேன்." என்றாள்.

ஆனால், அத்தாயின் மனநிலையையறிந்த சங்கரர் "தாயே! எனக்கிடுவதற்கு அன்னம் இல்லையே என்ற கவலை வேண்டாம். அன்னத்துக்குத் தொட்டுக் கொள்ள துணைப் பொருள் ஏதாவது இருக்குமே! அதையாவது கொடுத்தால் போதும்" என்று மறுமொழி கூறினார்.

உடனே அந்தத் தாய்க்கு, முன்பு எப்போதோ ஒரு பழைய பாத்திரத்தில் போட்டு வைத்திருந்த வற்றி வறண்ட நெல்லிக்கனி ஒன்று பற்றி நினைவுக்கு வரவே, ஓடிச் சென்று

அதை எடுத்து வந்து சங்கரரின் பிட்சைப் பாத்திரத்தில் மிகுந்த பக்தியுடன் இட்டாள்.

கருணையே வடிவான மகான் சங்கரர், அந்த அம்மையாரின் வறுமை நிலையையும், அந்த வறுமை நிலையிலும் அவருக்களிக்கத் தம்மிடம் ஏதும் இல்லையே என்று வருந்தி வாடியதையும் கண்டு உள்ளம் மகிழ்ந்து, செல்வங்களுக்கெல்லாம் அதிபதியான திருமகளை நினைத்து, அந்த இல்லத்தில் உள்ளவர்களுக்கு அருள் மழை பொழியுமாறு வேண்டி 'கனகதாரா ஸ்தோத்திரம்' என்னும் பாடல்களைப் பாடினார்.

சங்கரரின் குரலைக் கேட்டு மனம் களித்த அன்னை மகாலட்சுமி, அவரது விருப்பத்திற்கேற்ப சோமதேவரின் இல்லத்தில் பொன் வண்ண நெல்லிக் கனிகளைப் பொழியச் செய்தார். இப்பாடல்களைப் பக்தியுடன் பாடுவோர்க்கும் இதே போல் தனது கருணை கிடைக்கும் என்றும் அருளிப் போந்தார்.

அந்தக் கணம் முதல் சோமதேவரின் இல்லத்தில், திருமகளின் கடைக்கண் பார்வையால், வறுமை ஒளிந்தது; வளமை பல்கிப் பெருகிப் பொழிந்தது.

மண்ணுலக மாந்தரின் நல்வாழ்வுக்கு வழிகாட்டும் பொருட்டு, மகான் ஆதிசங்கரர் அள்ளி வழங்கிய அரிய பல அருளமுதங்களுள் ஒன்றான இக்கனகதாரா ஸ்தோத்திரம், மிகுந்த சக்தி வாய்ந்த ஒன்றாகும்.

கனகதாரா ஸ்தோத்திரம் என்னும் இப்பாடல்களை மனத் தூய்மையோடு பாடி மகாலட்சுமியின் அருளைப் பெற்று எல்லாரும் இன்புறுக!

- பதிப்பகத்தார்



கடவுள் வணக்கம்

ஆதி சங்கரர் அருளிய நிதியை
அன்னை லக்ஷ்மி பொன்மழைத் துதியை
ஓதிடும் செந்தமிழ் பாடல் இதற்கு
ஒத்தைக் கொம்பன் சித்தடி காப்பு

வாக்குக் கதிபதி வாணி சரணம்
வற்றா ஊற்றென வார்த்தைகள் தரணும்
ஆக்கமளிக்கும் ஆறுமுக சரணம்
அடியேனுக்குன் ஆசியும் தரணும்

திருமகளாம் உன் தேவியின் மீது
செந்தமிழ் பாட்டைச் செப்பிடும் போது
குறைகள் நீக்கிட வந்திடுவாயே
குருவாயூர் கோவிந்தா நீயே.

ஸ்ரீ ஆதிசங்கர பகவத் பாதர் அவதாரம்

பாரதப் புண்ணிய பூமியிலே - ஒரு
பக்கம் மலையாளச் சீமையிலே
சீருள்ள காலடி க்ஷேத்திரமாம் - அது
க்ஷேத்திரங்களுக்குள் நேத்திரமாம்.

அந்தக் காலடித் தலத்தினிலே-உயர்
அந்தணர் வழிக் குலத்தினிலே
வந்த சிவகுரு வாழ்ந்து வந்தார்-நல்ல
மங்கை ஆரியாம்பாளை மணந்தார்.

அந்த தம்பதிக்கோர் சந்ததியாய்-நம
(இ)திந்தியர் பெற்ற தவநிதியாய்
வந்து பிறந்ததோர் பிள்ளையம்மா-அதன்
மகிமை சொல்ல வார்த்தை யில்லையம்மா.

சங்கரன் கயிலைப் பதிவிடுத்து-ஆதி
சங்கரராக வடிவெடுத்து
எங்கும் ஞானஒளி வீசவந்தார்-இங்கு
இரண்டில்லாத் தத்துவம் பேசவந்தார்.

ஸ்ரீ ஆதிசங்கரர் ஆபத்சந்நியாசம் பெற்றது

சின்னஞ்சிறு வயதில்-தந்தை மறைந்திடவே
அன்னையும் சங்கரரை - கிளியே
அன்புடன் பேணி வந்தாள்.

அறியாப் பருவத்திலே-ஆறேழு பிராயத்திலே
துறவறம் மேற்கொள்ளவே - கிளியே
துடித்தனர் சங்கரரும்.

சந்நியாசம் வாங்கிக்கொள்ள-தாயின் அனுமதியை
சங்கரர் கேட்டனராம்-கிளியே
தாயவள் மறுத்துவிட்டாள்.

அம்மாவுடன் இருந்தால்-அவதார காரியங்கள்
இம்மியும் நடக்காதென்றே - கிளியே
ஏங்கினார் சங்கரரும்.

ஜகத்குருவாகப்போகும்-சங்கரரின் சஞ்சலத்தை
அகற்றிட ஆண்டவனும்-கிளியே
அற்புதம் செய்தானடி.

முன்பொரு சாபத்தினால்-முதலையாய் கந்தருவன்
தன் சாபம் தீர்ந்திடவே-கிளியே
சமயமும் பார்த்திருந்தான்.

அதிகாலை நீராடவே-அன்னையுடன் சங்கரரும்
நதிக்கரை சென்றாரடி - கிளியே
நடந்தது அதிசயமே.

ஆதிகுரு ஸ்நானம்செய்ய-ஆற்றில் இறங்கியதும்
பாதத்தை முதலையதே-கிளியே
பற்றி இழுத்ததம்மா.

அம்மா முதலை என்றே-அலறினார் சங்கரரும்
தன்மகன் நிலை கண்டதும்-கிளியே
தாயவள் துடிதுடித்தாள்.

உதவிக்கு ஆளைத்தேடி-ஒருவரும் காணாமலே
பதறியே நின்றுவிட்டாள்-கிளியே
கதறிக்கண் ணீரும் விட்டாள்.

சந்நியாசம் பெற்றுக்கொள்ள-சம்மதம் தந்துவிட்டால்
தன்னுயிர் பிழைக்கும் என்றார்-கிளியே
அன்னையிடம் சங்கரரும்.

அப்படியே தந்துவிட்டேன்-ஆருயிர்க் கண்மணியே
எப்படியும் நீ பிழைத்தால்-கிளியே
எனக்கது போதுமென்றாள்.

அக்கணமே சாபம் தீர்ந்து-அகன்றது முதலையதே
சிக்கெனக் கரையேறினார்-கிளியே
ஜெய ஜெய சங்கரரும்.

ஸ்ரீ ஆதிசங்கரர் அன்னையைப் பிரிந்து சென்றது

வீட்டுக்குத்தாயும் அழைத்தாள்-ஆனால்
வீம்புடன் சங்கரர் வரவும் மறுத்தார்.

உலகமே எனது வீடாகும்-அதில்
உள்ள பெண்கள் எல்லாம் என்தன்னையாகும்.

சந்நியாசிக்கேதம்மா பந்தம்-இந்த
ஜெகமெல்லாம் அவனுக்கு உறவுமுறை சொந்தம்

என்றந்த மகன் சொல்லக்கேட்டு-மனம்
நொந்துமே தாயவள் கண்ணீரும் விட்டு

அந்திம காலத்தின் போது-என்
அருகில் நீ இருந்திட வேணும் தப்பாது

இந்த ஒரு உறுதிமொழி தந்தால்-நீ
எங்கே இருந்தாலும் கவலையில்லை என்றாள்.

இறுதிகாலம் வரும்போது-நான்
எங்கே இருந்தாலும் வருவேன் அப்போது

மரணத்தின் வேளை நானறிவேன்-ஈன்ற
மாதா உனக்கெந்தன் மடியையும் தருவேன்.

தள்ளுவேன் சந்நியாச தர்மம்-பெற்ற
தாயார் உனக்கு நான் செய்வேனே கர்மம்

நம்புவாய் என்வார்த்தை என்றார்-அந்த
நன்மனம் படைத்த தாய் தன்வீடு சென்றாள்.

தன் பசிக்குணவினைத் தேடி - ஆதி
சங்கரர் சென்றார் அக்ரஹாரம் நாடி

ஜெய ஜெய சங்கரா ஜெய் ஜெய்

ஸ்ரீ ஆதிசங்கரர் பிக்ஷைக்குச் சென்றது

அக்ரஹாரத்தில் ஒரு வீடு-அது
அடிபெயர்ந்து சுவர்கள் இடிந்திருக்கும்

அங்கே ஒரு மாதரசி-தனது
அருமைக் கணவனுடன் வறுமையிலே

குடித்தனம் நடத்தி வந்தாள்-அந்த
குணவதி தர்மசீலை என்னும் பெயராள்

அவளது வீட்டின் முன்னே-நமது
ஆதி சங்கரரும் உச்சிப்போதினில் சென்று

'பவதி பிக்ஷாந்தேஹி' என்று
பணிவுடன் யாசித்தனர் உணவினையே

உருக்கும் அக்குரல் கேட்டு - அந்த
உத்தமியும் வெளிவந்து சித்தமிரங்கி

பாலகனின் பசி தணிக்க-வீட்டில்
பண்டம் ஒன்றுமில்லாததை எண்ணித் துடித்தாள்.

உள்ளம் பொங்கிக் குமுறிடவே-உள்ளே
ஓடிச்சென்று அங்குமிங்கும் தேடிப்பார்த்தாள்.

கிடைத்ததோர் நெல்லிக்கனியே-அதனை
எடுத்து வந்தவர் கையில் கொடுத்துவிட்டு

நல்லபடி பிக்ஷையிடவே - இந்த
நெல்லிக்கனி தவிர வேறில்லை அப்பனே.

என்றவளும் சொல்லக்கேட்டு-கனியை
ஏற்றுக்கொண்ட சங்கரரும் போற்றிச்சொல்லுவார்.

அதிதிக்கு ஏற்ற பிக்ஷை-இதுபோல்
அவனியில் இல்லையம்மா கவலைவிடும்

வறுமையும் நீங்கிவிடும்-இனிமேல்
வளமை கொழிக்கும் நல்ல நிலைமை வரும்

ஐஸ்வர்ய தேவதையாம்-அந்த
அரவிந்த மலரம்மை அருள்பெறவே

ஓதித்துதி பாடிடுவேன்-இதனை
உரைத்தவர்க் கென்றுமில்லை தரித்திரமே.

ஜெய ஜெய சங்கர ஜெய்

கனகதாராஸ்தவம் ஸ்லோகங்கள்

(தமிழாக்கம்)

பூத்ததொரு தமாலத்தின்
பூமொட்டில் வண்டுபோல
பொன்வண்ண ரோமாஞ் சந்தான்
பொலியும்ஹரி மேனி தன்னைப்
பார்த்து மனம் களித்திருக்கும்
பாக்யலக்ஷ்மி எந்தன்பக்கம்
பார்வையதைத் திருப்பியே
ஸௌபாக்யங்கள் தந்திடம்மா.

நீலோத்பலத்தில் மேவி
நீங்கும் வண்டினத்தைப்போல
நீண்ட விழியிரண்டினாலும்
நீலவண்ன் எழிலைப்பருகும்
பாலாழி மகிழ்ந்தளித்த
பாவையே உந்தன் பார்வை
பாரிலே கொழிக்கும்செல்வம்
பரிந்தெனக் களித்திடட்டும்.

இந்திர போகம் எல்லாம்
இங்கே தர வல்லதான
எம்பெருமான் தனக்கேஎன்றும்
இன்பமூட்டும் சாதனமான

செந்திருவுன் நீலோத்பல
செவ்வரி கடைக்கண்கள்தன்
திருஷ்டியது எந்தன்மீது
க்ஷணகாலம் நிலைத்திடட்டும்.

கண்களை இமைத்திடாது
தன்னையே பார்த்துப்பார்த்து
களிக்குந்திருமாலின் நெஞ்சில்
காமரசம் பொங்கச்செய்யும்
கண்களால் நோக்குகின்ற
கமலக்கண் மடந்தையவள்
கண்களது ஐஸ்வர்யத்தைக்
கணக்கின்றி வழங்கிடட்டும்.

நாரணன் மார்பில் பூணும்
நல்லதொரு கௌஸ்துபம்மேல்
நாடியே பதித்திருக்கும்
நீலக்கல் வரிசைபோல
சேரும் மஹாலக்ஷ்மியவள்
நீலமணி நேத்திரங்கள்
செல்வமுடன் மங்களத்தைச்
சேர்க்கட்டும் எந்தனுக்கு.

கார்மேக மின்னல் போல
கார்வண்ணன் மேனி தன்னில்
காணுமோர் மின்னற்கொடியாய்
காட்சி தரும் லோகமாதா

சீரான பிருகு வம்சத்தைச்
சிறப்பிக்க வந்த நங்கை
ஜெய மங்களம் எனக்கு
சீக்கிரம் அளித்திடட்டும்.

மங்களம் சேரும் வடிவம்
மன்மதனை ஈன்றெடுத்த
மாலவன் இதயந்தன்னில்
காதலை ஊட்டும் சக்தி
அங்கஜன் தனக்களிக்கும்
அம்புஜச்செல்வி நோக்கில்
அரைக்கண் பார்வை கொஞ்சம்
என்மீதும் வீழ்ந்திடட்டும்.

தேவி நின் கருணைக்காற்று
சாதகப்பறவை போன்ற
தீனனாம் எந்தன் மீது
தீவினை வெப்பம் வந்து
மேவியே தகித்திடாது
வெகுதூரம் ஓட்டி உந்தன்
விழிமேகம் குளிரச்செய்து
நிதிமழை பொழிந்திடட்டும்.

பத்மநாபனை மயக்கும்
பத்மினியின் கனிந்தபார்வை
பாவிகளும் மிக எளிதாக
பரலோக ஸ்வர்க்கம்தன்னை

நத்தியே அடையச்செய்யும்
சக்தியைப் படைத்ததந்த
நயனங்கள் எந்தனுக்கு
நல்வாழ்வை அளித்திடட்டும்.

ஆக்குதலில் வாணியாக
காப்பதிலே லக்ஷ்மியாக
அழிப்பதில் துர்க்கையாக
சங்கரனின் தாரமாக
தேக்கி மூவுலகம் ஆளும்
பிரம்மத்தின் தேவியாக
திகழ்கின்ற பூமகளே உன்
திருவடிக்கு நமஸ்காரம்.

கர்மபலன் அளிக்கும் வேத
வடிவழகி நமஸ்காரம்
கல்யாண குணம் நிறைந்த
ரதிதேவி நமஸ்காரம்
ஸ்வர்ணத்தாமரை வளரும்
பராசக்தி நமஸ்காரம்.
சுந்தரத்திருமால் மருவும்
சுந்தரியே நமஸ்காரம்.

செந்தாமரை வதனி
சேவடியில் நமஸ்காரம்
திருப்பாற்கடலில் வந்த
செந்திருவே நமஸ்காரம்

சந்திரன் அமுதத்திற்கு
சகோதரி நமஸ்காரம்
ஜகன்னாதன் பத்தினிஉனக்கு
சதகோடி நமஸ்காரம்.

பூவிழியாள் உன்னடிக்குப்
போற்றிச்செய் நமஸ்காரம்
பொன்பொருள் ராஜபோகம்
புலன்களுக்கின்பம் தந்து
மேவும் என்வினைகளெல்லாம்
விலகியே ஓடச்செய்து
மிஞ்சிடும் இன்பம் தந்து
என்றுமெனை ரக்ஷிக்கட்டும்.

யாதொரு கடாக்ஷத்யானம்
அடியார் தமக்குச்செல்வம்
அனைத்தையும் அள்ளித்தருமோ
அதனையே நானும்செய்து
மாதரசே மனதினாலும்
வாக்காலும் தேகத்தாலும்
வணங்கியே பூஜிக்கின்றேன்
வரமருளவேணும் தேவி.

வெண்பட்டும் ஜாதிப்பூவும்
தரித்து மூவுலகத்திற்கும்
வேண்டும்நிதி பொழியும்லக்ஷ்மி
பிறர்மனம் அறியும் தாயே

செங்கமலம் கையில்கொண்டு
செங்கமலம் வீற்றிருக்கும்
செங்கமல நாபன் கண்ணே
சிறியேனின் வறுமைதீர்ப்பாய்.

தங்கக்குடத்தில் கங்கை
ஜலம் கொண்டுதிக்கஜங்கள்
தாயுன்னை நீராட்டுவதால்
பரிசுத்தமாக்கப்பெற்ற
பொங்கமுதக்கடலின் புத்ரி
புவனங்கள் ஈன்ற அன்னை
புவன சுந்தரனின் தேவி
புதர் பொழுதில் வணங்குகின்றேன்.

அவலமாய் வறுமைநோய்க்கு
ஆளான நானும் உந்தன்
அளவற்ற கருணை ஏற்க
அருகதை மிக்க உள்ளேன்
கமலமே கமலக்கண்ணன்
கண்மணியே கருணைபொங்கும்
கடைக்கண்ணால் என்னைப்பார்த்து
காப்பாற்ற வேணும்அம்மா.

சப்தப்ரம்ம ஜகன்மாதா
சௌபாக்கியலக்ஷ்மி உன்னை
இப்புனிதப்பாடல் கொண்டு
எந்நாளும் துதிக்கும் மாந்தர்

இப்புவியில் கல்விமான்கள்
போற்ற நற்குணங்கள்பெற்று
ஈடிலாச் செல்வம்பொங்க
வாழ்ந்திடுவீர் திண்ணந்தானே.

ஸ்ரீ மஹாலக்ஷ்மி தங்கமழை பொழிந்தது

சங்கரர் இத்துதிபாட - லக்ஷ்மி
தங்கநெல்லிக்கனிமழை அங்கு பெய்தனள்
மண்ணில் இந்த அதிசயத்தைக் - கண்ட
மாதுதர்மசீலை அவர் பாதம் வீழ்ந்தாள்.

மாதவளை வாழ்த்திவிட்டு - அந்த
ஆதிகுரு சென்றனராம் வீதிவழியே
தங்க மழைப்பாடல் இதனை - மக்கள்
எங்கு பாடினாலும் பெய்யும் தங்கமழையே.

ஜெய ஜெய சங்கர ஜெய்

ஆதிசங்கரர் அருளிய

கனகதாரா ஸ்தோத்திரம்

உரை : கு. சண்முகசுந்தரம்

அங்கம் ஹரே: புளக பூஷணம் ஆச்ரயந்தீ
பருங்காங்கனேய முகுளாபரணம் தமாலம்
அங்கீகுருதாகில விபூதி: அபாங்க லீலா
மாங்கள்ய தாஸ்து மம மங்களா தே வதாயா: 1

பொன்நிற வண்டுகள் மொய்க்கின்ற முகுள மலர்களைப் போல கார்முகில் வண்ணனாம் மகாவிஷ்ணு மகிழ்ச்சிப் பெருக்கால் திளைத்தவராகக் காட்சி தருகிறார். செல்வங்கள் அனைத்துக்கும் நாயகியான மகாலட்சுமி அவருடைய திருமார்பில் உறைவதால் இலட்சுமி நாராயணனாகக் காட்சியளிக்கிறார். பொன்னொளி வீசித் திகழும் அந்தத் திருமகளின் கடைக்கண் பார்வைபட்டால் செல்வத்திற்குக் குறையிராது.

மலர்கள்தோறும் சென்று, மலர்களின் மகரந்தத்தைப் பருகும் தேனீக்கள், மலரின் சாரத்தை மட்டும் உறிஞ்சி எடுக்கின்றன. தேனைச் சேகரிக்கின்றன. அதே போல அன்னையும் நம்மிடம் உள்ள நல்ல குணங்களை எண்ணிப் பார்த்து அவற்றிற்கேற்றவாறு செல்வப் பயன்களை வழங்குகிறாள். எனவே, உன்னைத் துதிக்கும்

எனக்கு செல்வத்தைத் தந்தருள்க என, திருமகளே! உன்னை வேண்டுகிறேன்.

முக்தா முஹுர்வித தீ வதனே முராரே:
ப்ரேமத்ர பாப்ரணி ஹிதானி கதாக தானி
மாலா த்ருசோர் மதுகரீவ மஹோத் பலேயா
ஸ மேச்ரியம் திசது ஸாகர ஸம்பவாயா. 2

மகரந்தத் தேனை மகிழ்ந்துண்ண விரும்பி மலர்களை நாடி வருகின்ற வண்டினங்களைப் போல, நீலோற்பல மலர்களைப் போன்ற திருவிழிகளைப் பெற்றுள்ள முராரியாம் திருமாலின் அழகிய திருமுகத்தைக் காண வேண்டும் என்னும் பேராவலினால் உந்தப்பட்டு, திருமகளின் விழிமலர்கள் சுழன்றாடுகின்றன. உடனே, பெண்மைக்கேயுரிய இயல்பான நாணத்தால் திருமகளின் விழிகள் அகல்கின்றன.

பின்னர் சற்று நேரததில் மீண்டும் பகவானின் முகத்தைப் பார்க்கின்றன. இவ்வாறு விருப்பமும், வெட்கமும் மாறி மாறி ஏற்படுவதன் காரணமாக, ஸ்ரீதேவியின் விழிகளும் சுழன்று, சுழன்று தவிக்கின்றன. அத்தகைய தேவியின் கடைக்கண் பார்வை என்மீது விழுமானால் நான் எல்லாச் செல்வங்களையும் அடைந்துவிட முடியும்.

விச்வாமரேந்த்ர பதம் விப்ரம தாநதக்ஷம்
ஆனந்த ஹேது ரதிகம் முரவித் விஷோபி
ஈஷத் நிஷீததுமயி க்ஷணம் ஈக்ஷணார்த்தம்
இந்தீவ ரோதர ஸகோதரம் இந்திராயா: 3

ஓங்கி உலகளந்த உத்தமனாம் பெருமானின் உள்ளக் களிப்புக்குக் காரணம், ஸ்ரீதேவியின், நீலோற்பல மலருக்கு இணையான அழகிய திருவிழிகளேயாகும். செல்வங்கள் அனைத்திற்கும் அதிதேவதையான திரு மகளின் கடைவிழிப் பார்வை, இம்மைக்குத் தேவையான பொருட்செல்வத்தையும், மறுமைக்குத் தேவையான அருட்செல்வத்தையும் வாரி வாரி வழங்கவல்லவை.

அத்தகைய தேவியாம் அன்னை மகாலட்சுமியின் அருள் ததும்பும் கண்களின் கடைப்பார்வை, நம் போன்றவர்களின் மீது பட்டாலே போதும். இந்திரலோகத்து மாந்தர் அடைந்து மகிழும் எல்லையற்ற செல்வ சுகங்களை அளித்துக் காத்திடும் அன்னை மகாலட்சுமியே! அத்தகு இன்ப நலன்களை எனக்கு அருள்வாயாக!

ஆமீலி தாக்ஷ மதிகம்ய முதா முகுந்தம்
ஆனந்த கந்தம் அநிமேஷம் அகங்க தந்த்ரம்
ஆகே கரஸ்திதிக நீநிக பத்ம நேத்ரம்
பூத்யை மம புஜங்க சபாங்க நாயா: 4

பாம்பணையின் மேல் பள்ளிகொண்டபடி அனைத்துலகங்களையும் காத்தருளும் பரந்தாமனின் பேரழகை, அவரது திருமார்பில் உறையும் தேவியாம் திருமகள் விழிகளை மூடி மூடித் திறந்து கண்டு மகிழ்கிறாள். பாதி மூடியும் மூடாமலும் இருக்கும் தன் திருவிழிகளால் மூவுலகும் கொண்டாடும் முகுந்தனைக் கண்டு மகிழ்கிறாள்.

அந்தத் திருமகள் தன் மார்பில் உறையும் தன்மையைக் கண்டு பரந்தாமன் பரவசப்படுகிறார். திருமகளின் கடைக்கண் பார்வை நம் மீது பட்டாலே திருமகளின் அருளும், பரந்தாமனின் அருளும் நமக்குக் கிட்டியது போலாகும். எனவே, அன்னை மகாலட்சுமியே! உன் திருவிழிப் பார்வையை என்மீது திருப்பி, எனக்கு சகல செல்வ நலன்களையும் அருள்வாயாக!

பாஹ்வந்த்ரே மதுஜித: ச்ரித கௌஸ்து பேயா
ஹாரவலீவ ஹரிநீலமயீ விபாஅதி
காமப்ரதா பகவதோ (அ) பி கடாக்ஷ மாலா
கல்யாண மாவஹது மே கமலாலயாயா. **5**

மது என்னும் அரக்கனை வதைத்த மாயவனான மணிவண்ணனின் திருமார்பில் கௌஸ்துப மணி மாலை என்னும் நீலமணி மாலை ஒளிவீசித் திகழ்கிறது. அழகுறக் கோக்கப்பட்ட இம்மாலையின் நீலமணி களைப் போன்றே திருமகளின் விழிகள் ஒளிவீசித் திகழ்வதால், இத்திருவிழிப் பார்வை, பரந்தாமனுக்கு மகிழ்ச்சியூட்டுவது மட்டுமன்றி; மண்ணுலக மக்களுக்கு எல்லா நலன்களையும் தருவதுமாகும்.

கமலமலரின் இதழ்களின் நடுவிலமர்ந்து, மண்ணுலக மக்களுக்கெல்லாம் உன் கருணையை வழங்கிக் கடாட்சிக்கும் திருமகளே! உன் திருவிழியின் கடைப்பார்வையை என் மீது செலுத்தி எனக்குச் செல்வ நலன்கள் அனைத்தையும் அருள்வாயாக!

காலாம்புதாலி லலிதோரஸி கைடபாரே:
தாராதரே ஸ்புரதி யா தடிதங்கதேவ
மாது: ஸகஸ்த ஜகதாம் மஹநீய மூர்த்தி
பத்ராணி மே திசது பார்க்கவ நந்த நாயா: 6

மது என்ற அரக்கனுக்கு இணையான கைடபன் என்ற கொடிய அரக்கனையும் வதைத்த கார்மேக வண்ணனாம் பரந்தாமனின் திருமார்பில் மின்னல் போல ஒளிவீசித் திகழும் அன்னையே! பிருகு வம்சத்தில் தோன்றி அனைத்துலகுக்கும் செல்வ நலங்களை வழங்கியருளும் திருமகளே!

அனைத்துலகங்களுக்கும் அன்னையாக விளங்கி அருளிக்காக்கும் அன்னை பராசக்தியின் வடிவமாகத் திகழும் திருமகளே! உன் கடைவிழிப் பார்வையை என்மீது செலுத்தியருளுமாறு போற்றித் துதிக்கிறேன். எனக்கு அருள் செய்வாயாக!

ப்ராப்தம் பதம் பரதமத: கனு யத்ப்ரபாவாத்
மாங்கல்ய பாஜி மதுமாதிநி மன்ம தேந
மய்யா யதேத் திஹ மந்த்ரம் ஈக்ஷணார்த்தம்
மந்தா லஸம் ச மகராலய கந்யகாயா. 7

மது, கைடபர் என்னும் அரக்கர்களை வதைத்த மாயவனான பரந்தாமனிடம், காமதேவனான மன்மதன் வெற்றி பெற இயலாத நிலையில், தன் கரும்பு வில், மலர் அம்புகளையெல்லாம் விட்டு விட்டு, திருமகளின் கருணையை மன்மதன் வேண்டி மன்றாடினான். கருவண்டுகளை யொத்த திருமகளின் திருவிழிப் பார்வையினால் மட்டுமே பரந்தாமனுக்கு மோகமூட்ட

இயலும் என்பதை அறிந்து கொண்ட மன்மதனின் இம்முயற்சி வெற்றியை நல்கியது.

பாற்கடலைக் கடைந்து அமுதமெடுக்க தேவர்களும், அசுரர்களும் முயன்றபொழுது, அதில் தோன்றிய திருமகளாம் அன்னையே! மன்மதனுக்கு அருளியது போல என்மீதும் உன் திருவிழிப் பார்வையைச் செலுத்தி செல்வ நலன்கள் யாவற்றையும் எனக்கு அருள்வாயாக!

தத யாத்த யானுபவனோ த்ரவிணாம் புதாராஆம்
அஸ்மின்ன திஞ்சன விஹம் கசிசௌ விஷண்ணே
துஷ்கர்ம கர்ம மபநீய சிராய தூரம்
நாராயண ப்ரணயிநீ நயனாம் புவாஹ:

தம்மை வேண்டித் துதிக்கும் அடியவர்களுக்கு அருளும் கருணையின் விளைவாகவே, திருமகளின் விழிமலர்கள் நீலோற்பல மலர்களுக்கு நிகரான எழிலைப் பெற்றுத் திகழ்கின்றன. இந்தக் கருவிழிகளை மழைநீரைச் சுமந்து கொண்டு நிற்கும் கருமேகங்களுடன் ஒப்பிடலாம். கருமேகங்களின் மீது மெல்லிய குளிர்காற்று பட்டாலே மழை பொழியும்.

அன்னத்துலகங்களையும் காத்ருளும் நாராயணனுக்கு உயிர் போன்ற, தாயே! அருள் மழையைப் பொழிந்து, என்னை வாட்டி வதைக்கும் வறுமை நோயினைப் போக்கி, வளமான வாழ்வையும், பன்னலங்களையும் வழங்கி அருள்வாயாக!

இஷ்டா விசிஷ்ட மதயோ (அ) பி யயாத யார்த்ர
த்ருஷ்ட்யா த்ரிவிஷ்ட பபதம் ஸுலப மலபந்தே
த்ருஷ்டி: ப்ரஹ்ருஷ்ட கமலோதர தீப் திருஷ்டாம்
புஷ்டிம் க்ருதிஷ்ட மம புஷ்கர விஷ்டராயா.

உலகிற் பிறந்த எல்லாராலும் தாம் கட்டுண்டு தவிக்கும் ஆணவம், கன்மம், மாயை என்னும் மாயா மலங்களான மும்மலங்களையும் அகற்றி, தூய நெறிவழி நின்று, இறுதியில் முக்திபெற்று இறைவனின் திருவடிகளைச் சென்று சேரும் பேற்றினை எளிதாகப் பெற முடிவதில்லை. ஆயினும் மணிவண்ணனாம் மாயவனின் இதயத் தாமரையில் உறைபவளான திருமகளின் கடைவிழிப் பார்வை பட்டால் பாவ வினைகள் நீங்கவும், பரமனின் திருவடிகளை அடையவும் இயலும்.

பாற்கடலில் துயிலும் பரந்தாமனின் மனத்திற்கு மகிழ்வூட்டிடும் அழகிய திருமகளே! உன் அருட்பார்வை ஆற்றல் மிக்கது. அத்தகைய பார்வையானது என்மீது பட்டால் என் முன் வினைகள் யாவும் அகன்று நான் நலங்காணல் இயலும். அன்னையே! அத்தகைய பேற்றினை எனக்கு அருள்வாயாக!

கீர்தேவ தேதி கருடத்வஜ ஸுந்தரீதி
சாகம் பரீதி சசிசேகர வல்லபேதி
ஸ்ருஷ்டி ஸ்திதி ப்ரளய கேளிஷு ஸம்ஸ்தி தாயை
தஸ்யை நம: ஸ்திரி புவனைக குரோஸ்த தருண்யை 10

ஆக்கல் என்னும் படைப்புத் தொழிலைப் பிரம்மாவும் காத்தல் தொழிலைத் திருமாலும், அழித்தல் தொழிலைச் சிவபிரானும் புரிந்து வருகிறார்கள். இவர்கள் தம் தொழிலைச் செய்கிறார்கள் எனினும், இம்மூவரின் துணைவியரான சரசுவதி, இலக்குமி, பராசக்தி ஆகிய மூவருமே இப்பணிகளுக்குரியவர் களாய்ப் போற்றப் பெற்று வருகின்றனர்.

இந்த முத்தொழில்களையும் புரியும் சக்தியின் அதிதேவதையான மகாலட்சுமியே! மூவுலகையும் காத்தருளும் பரமனின் பத்தினியே! பொருளும், புகழும் கிடைக்கப்பெற்று மகிழும் வகையில் எல்லா நலன்களையும் எனக்கு அருள்வாயாக!

ச்ருதுயை நமோஸது சுபகர்ம பலப்ரஸூத்யை
ரத்யை நமோஸ்து ரமணீய குணார்ணவாயை
சக்த்யை நமோஸ்து சத் புத்ர நிகேத நாயை
புஷ்ட்யை நமோஸ்து புருஷோத்தம வல்லபாயை 11

தாமரை மலரில் உறையும் திருமகளாம் அன்னை மகாலட்சுமியே! வேதத்தின் உட்பொருள் நீ. அந்த வேதத்தைக் காத்திடும் பகவானின் நெஞ்சத்தில் இடம் பெற்றவள் நீ. பண்புகள் அனைத்திற்கும் அணியாய் விளங்குபவள் நீ. நற்கருமங்கள் யாவற்றிற்கும் உரிய பயனை அள்ளித் தரும் பராசக்தியின் மறு வடிவே! வணங்குகிறேன். தாமரை மலரின் வீற்றிருக்கும் தாயே! வணங்குகிறேன்.

புருஷர்களிலெல்லாம் உயர்ந்தவரான புருஷோத்தமன் என அழைக்கப்படும் மகாவிஷ்ணுவின் மனங் கவர்ந்த நாயகியே! வணங்குகிறேன். சகல சக்திகளின் வடிவமாக விளங்கி, ஆற்றல்களைத் தரும் தாயே! எனக்கு அனைத்து நலன்களையும் அருள்வாயாக!

நமோஸ்து நாளீக நீ பானாயை
நமோஸ்து துக்தோ ததி ஜன்ம பூம்யை
நமோஸ்து ஸோமாம்ருத சோதராயை
நமோஸ்து நாராயண வல்லபாயை: 12

மலர்ந்து விரிந்து எழிலை அள்ளித் தெளிக்கும் வண்ண மலராம் தாமரை போன்ற அழகிய முகம்படைத்த தேவி! வணங்குகிறேன். பாற்கடலைத் தேவர்களும் அசுரர்களும் கடைந்தபொழுது தோன்றிய அன்புத் தாயே! வணங்குகிறேன். அப்பொழுது பாற்கடலிலிருந்து உன்னுடன் வெளிவந்த சோமபானம் எனப்படும் அமுதம், சந்திரன் ஆகியோரை உனக்குச் சகோதரர்களாகப் பெற்ற தாயே! வணங்குகிறேன்.

பாற்கடலில் பள்ளி கொண்டவராம் பரந்தாமனின் உள்ளத்தில் என்றும் நீங்காது நிறைந்தவளும், அடியவர்களின் துயரங்களைப் போக்கியருளும் வல்லமை மிக்கவளுமான தாயே! உன்னை வணங்குகிறேன். செல்வமும் நல்வாழ்வும் தந்தருள்க, தாயே!

நமோஸ்து ஹேமாம்புஜ பீடிகாயை
நமோஸ்து பூமண்டல நாயிகாயை
நமோஸ்து தேவாதி தயாபராயை
நமோஸ்து சார்ங்காயுத வல்லபாயை: 13

பொன்னெனப் பொலியும் அழகுத் திருக்கரத்தில் தாமரை மலரை ஏந்தியவாறு தாமரை மலரில் அமர்ந்துள்ள தாயே! வணங்குகிறேன்.

அனைத்து உலகங்களிலுமுள்ள உயிரினங்களுக்கும் தாயாய் விளங்கும் அன்பிற்குரிய அன்னையே! வணங்குகிறேன். தேவர்களும் போற்றி வணங்கும் வண்ணம் அவர்களுக்கும் மற்றுமுள்ள யாவர்க்கும் அருள்புரிந்து காக்கும் கருணைத் திருவுருவே! வணங்குகிறேன்.

சாரங்கம் என்னும் அழகிய கருவியைக் கரத்தில் தரித்திருக்கும் அண்ணலாம் மகாவிஷ்ணுவின் மகிமை யினால் அனைத்துச் சக்திகளையும் பெற்றுத் திகழும் தாயே! வணங்குகிறேன்.

நமோஸ்து தேவ்யை: ப்ருகு நந்த நாயை:
நமோஸ்து விஷ்ணோ ருரஸி ஸ்திதாயை
நமோஸ்து லக்ஷ்ம்யை கமலாலயாயை:
நமோஸ்து தாமோதர வல்லபாயை: 14

முனிவர்களுள் உயர்ந்தவரான பிருகுவின் வம்சத்தில் தோன்றிய தாயே! வணங்குகிறேன். ஆக்கல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழில்களில் காத்தல் தொழிலைத் திறம்படச் செய்யும் பணியில் மகா விஷ்ணுவுக்கு உதவிபுரிந்து வரும் தாயே! வணங்குகிறேன்.

தாயே! தாமரை மலரில் அழகுற விளங்கும் திருமகளே! யசோதைப் பிராட்டியின் மணிவயிற்றில் உதித்து அந்த அன்னைக்குப் பெருமை தேடித் தந்த பெருமானாம் தாமோதரனின் மனங்கவர்ந்த நாயகியே! வணங்குகிறேன்.

நமோஸ்து காந்த்யை கமலேக்ஷணாயை
நமோஸ்து பூத்யை புவன ப்ரஸூத்யை:
நமோஸ்து தேவாதி பிரார்ச்சி தாயை
நமோஸ்து நந்தாத்மஜ வல்லபாயை: 15

ஒளி பொருந்திய முகத்தைக் கொண்டவளே, தேவி! வணங்குகிறேன். தாமரை போன்ற முகமும், தாமரை மலர் போன்ற அழகிய திருவிழிகளும் அமையப் பெற்றவளே!

வணங்குகிறேன். நற்செயல்கள் யாவற்றிற்கும் இருப்பிடமாக இருந்து நலமருளும் நாயகியே! வணங்குகிறேன்.

உலகங்கள் யாவும் ஒழுங்குற இயங்கும் இயக்கத்திற்கு அடிப்படையாயிருந்து உதவும் தாயே! தேவர்கள் முதல் யாவரும் போற்றித் தொழும் தேவியே! வணங்குகிறேன். ஓங்கி உலகளந்த உத்மனாம் திருமாலின் அன்பிற்குருய தேவியே! வணங்குகிறேன்.

ஸம்பத் கராணி ஸகலேந்த்ரிய நந்தனானி
ஸாம்ராஜிய தான விபவானி ஸரோருஹாக்ஷி
த்வத் வந்தனானி துரிதா ஹரணோத்ய தானி
மாமேவ மாதர நிசம் கலயந்த்து மான்யே. ***16***

செல்வங்களுக்கெல்லாம் அதிபதியான தேவி! ஐம்புலன்களின் இயக்கத்திற்கும் அடிப்படை சக்தியான தாயே! அரச போகத்திற்கொப்பான பல்வகைச் செல்வங்களையும் குறையின்றி வழங்கும் அன்னையே! தேவருலகில் உள்ளவர்களாலும் வணங்கப்படும் சக்திமிக்க தாயே! வணங்குகிறேன்.

புலன்களுக்கப்பால் உள்ள எல்லையற்ற மகிழ்ச்சியை அளித்துக் காக்கவல்ல தாயே! எனக்குற்ற தீவினைகள் யாவற்றையும் பகலவனைக் கண்ட பனிபோல அகற்றி, குறைவில்லாச் செல்வங்களையும், மற்றுமுள்ள அனைத்து நலன்களையும் அருளிக் காப்பாயாக!

யத் கடாக்ஷஸ முபாஸனா விதி:
ஸேவ கஸ்ய ஸகலார்த்த ஸம்பத:
ஸந்தனோதி வசனாங்க மானஸை:
த்வாம் முராரி ஹ்ருதயேச்வரீம் பஜே: 17

முரன் என்னும் அரக்கனை வதைத்தருளியதால் முராரி எனும் திருநாமம் கொண்ட மாயவனாம் மாதவனின் மனத்திற்கினிய தேவியே! உலகிலுள்ள மக்களுக்கெல்லாம் அனைத்துச் செல்வங்களையும் அளித்துக் காக்கும் அன்னையே! உன்னை மனம், மொழி, மெய்களால் தொழுது போற்றுகிறேன். என் மன வேதனைகளை அகற்றி நல்வரம் பெற்றிட வேண்டித் துதி செய்கிறேன்.

உன்னைத் துதித்து உன் கடைக்கண் பார்வை பட்டாலே போதும் என எண்ணும் அடியவர்களைப் போல நானும், என் வறுமையை அகற்றி வளமான நல்வாழ்வைத் தருமாறு வேண்டித் துதிக்கிறேன். அன்னையே அருள்வாயாக!

ஸரஸிஜ நிலயே: ஸரோஜ ஹஸ்தே:
தவல தமாம்ஸுக கந்தமால்ய ஸோபே:
பகவதி ஹரிவல்லபே மனோக்ஞே
திரிபுவன பூதிகரி க்ரஸீத மஹ்யம்: 18

உன்னை வணங்கித் துதிக்கும் அடியவர்களின் உள்ளங்கள் எனும் அழகிய தாமரை மலர்களில் அமர்ந்திருக்கும் அன்னையே! உன் அழகுத் திருக்கரத்தில் தாமரை மலரை ஏந்தியிருக்கும் தாயே! தூய வெண்ணிற நல்லாடை அணிந்து, இனிய மணம் பரப்பும் வெண்ணிற மாலையும் அணிந்து அழகுற விளங்கும் தாயே!

அனைத்துயிர்களுக்கும் தாயான பராசக்தியின் வடிவமான பகவதி அன்னையே! தேவாதி தேவர்களும் மூவுலகும் போற்றித் துதிக்கத்தக்க வல்லமை மிக்க தாயே! மணிவண்ணனாம் மகாவிஷ்ணுவின் மனத்திற்கினியவளே! எல்லா ஞானங்களுக்கும் அதிபதியாகத் திகழும் தாயே! அடியவர்களின் மனத்திலுள்ளவற்றை அறியும் ஆற்றல் மிக்க தாயே! என் மனத்திலுள்ள துன்பங்களையும் அறிந்து அவற்றைப் போக்கி, பன்னலங்களையும் அருளிக் காப்பாயாக!

திக்கஸ்திபி: கனககும்ப முகா வஸ்ருஷ்ட
ஸ்வர்வவாஹினி விமலசாரு ஜலப்லு தாங்கீம்
ப்ராதர் நமாமி ஜகதாம் ஜனநீ மசேஷ
லோகதி நாத க்ருஹிணீம் அம்ருதஸ்தி புத்ரீம்: 19

எண் திசைகளிலிருந்தும் புனிதகங்கையின் நீரைப் பொற்குடங்களில் ஏந்தியவாறு வந்த யானைகள் அந்தப் புனிதநீரைக் கொண்டு மங்கள நீராட்டி, பூத்தூவி வணங்கியபின், எண்திசைகளிலும் ஒளிபரப்பி வீற்றிருக்கும் அருள்மிகு அன்னையே! வணங்குகிறேன்.

உலகிலுள்ள மக்கள் எல்லாரையும் காக்கும் கடவுளான - சுகங்களுக்கெல்லாம் நாதனான - மாலவனின் மனைவியே! பாற்கடலிலிருந்து தோன்றிய செல்வத் திருமகளே! வைகறைப் பொழுது புலர்வதற்குள் உன்னை நான் வணங்கிப் போற்றுகிறேன்.

கமலே கமலாக்ஷ வல்லபே த்வம்
கருணாபூர தரங்கி தைர பாங்க்யை:
அவலோக்ய மாம கிஞ்சனா னாம்
ப்ரதமம் பாத்ரமக்ரித்ருமம் தயாயா: 20

அழகிய தாமரை மலரில் உறையும் தாயே! தாமரை போன்ற திருவிழிகளைப் பெற்றதால் தாமரைக் கண்ணன் எனும் பெயர் பெற்ற திருமாலின் இனிய துணைவியே! வறுமைத் துன்பத்தைப் போக்கியருள்வதில் எனக்கு முன்னுரிமை கொடு எனக் கேட்பதையன்றி வேறெதுவும் அறியாத பேதை நான்.

உன் கருணையுள்ளத்தின் திருவருளை வேண்டித் தொழுது நிற்கும் என்னை உன் திருவிழிகளின் கடைப்பார்வையால் நோக்கி, என் வறுமையை விரட்டி, வளங்கள் பலவற்றையும் வழங்கியருள்க, தாயே!

ஸ்துவந்தியே ஸ்து ப்ரமீபிர் அன்வஹம்
த்ரயீமயீம் திரிபுவன மாதரம் ரமாம்
குணாதிகா குருதர பாக்ய பாஜிந:
பவந்திதே புவி புத பாவிதா ஸயா: *21*

உலகனைத்தையும் உருவாக்கியவளே! மூவுலகும் போற்றும் மோகனவல்லியே! கடல் போலக் கருணை பொங்கியெழும் நெஞ்சம் கொண்ட தாயே! தூயவர் களின் உள்ளங்களிலெல்லாம் நீங்காது நிலைத்திருப் பவளே! நல்லருள் பொழிக தாயே! என வணங்குகிறேன்.

இதுவரை கூறப்பட்ட பாடல்களை, தூய உள்ளத்துடன் பாடித் துதிப்பவர்கள் யாவருக்கும் திருமகளின் திருவருள் உறுதியாய்க் கிட்டும். நல்லருளும், பல்வகைச் செல்வங்களும், நல்லறிவும் பன்னலங்களும் குறைவின்றிக் கிட்டும்.

ஓம் ஸ்ரீ ஸௌபாக்யலக்ஷ்மி துதி

1. சுத்தலக்ஷ்மியை புத்திலக்ஷ்ம்யை வரலக்ஷ்ம்யை
நமோ நம
நமஸ்தே ஸௌபாக்யலக்ஷ்ம்யை மஹாலக்ஷ்ம்யை
நமோ நம

2. வசோலக்ஷ்ம்யை ஸௌபாக்ய்லக்ஷ்ம்யை
கானலக்ஷ்ம்யை நமோ நம
நமஸ்தே ச்ருங்காரலக்ஷ்ம்யை மஹாலக்ஷ்ம்யை
நமோ நம

3. தநலக்ஷ்ம்யை தான்யலக்ஷ்ம்யை தராலக்ஷ்ம்யை
நமோ நம
நமஸ்தே அஷ்டைஸ்வர்யலக்ஷ்ம்யை
மஹாலக்ஷ்ம்யை நமோ நம

4. க்ருஹலக்ஷ்ம்யை க்ராமலக்ஷ்ம்யை
ராஜ்யலக்ஷ்ம்யை நமோ நம
நமஸ்தே ஸாம்ராஜ்யலக்ஷ்ம்யை மஹாலக்ஷ்ம்யை
நமோ நம

5. சாந்திலக்ஷ்ம்யை தாந்திலக்ஷ்ம்யை
க்ஷாந்திலக்ஷ்ம்யை நமோ நம
நமோ அஸ்த்வாத்மாநந்தலக்ஷ்ம்யை
மஹாலக்ஷ்ம்யை நமோ நம

6. ஸத்யலக்ஷ்ம்யை தயாலக்ஷ்ம்யை
ஸௌக்கியலக்ஷ்ம்யை நமோ நம
நம; பாதிவ்ரத்யலக்ஷ்ம்யை மஹாலக்ஷ்ம்யை
நமோ நம

7. கஜலக்ஷ்ம்யை ராஜலக்ஷ்ம்யை தேஜோலக்ஷ்ம்யை
நமோ நம
நம; ஸர்வோத்கர்ஷலக்ஷ்ம்யை மஹாலக்ஷ்ம்யை
நமோ நம

8. ஸத்வலக்ஷ்ம்யை தத்வலக்ஷ்ம்யை
போதலக்ஷ்ம்யை நமோ நம
நமஸ்தே விஜ்ஞானலக்ஷ்ம்யை மஹாலக்ஷ்ம்யை
நமோ நம

9. ஸ்தைர்யலக்ஷ்ம்யை வீர்யலக்ஷ்ம்யை
தைர்யலக்ஷ்ம்யை நமோ நம
நமஸ்தே அஸ்த்வெளதார்யலக்ஷ்ம்யை
மஹாலக்ஷ்ம்யை நமோ நம

10. ஸித்திலக்ஷ்ம்யை ருத்திலக்ஷ்ம்யை
வித்யாலக்ஷ்ம்யை நமோ நம
நமஸ்தே கல்யாணலக்ஷ்ம்யை மஹாலக்ஷ்ம்யை
நமோ நம

11. கீர்த்திலக்ஷ்ம்யை மூர்த்திலக்ஷ்ம்யை
வித்யாலக்ஷ்ம்யை நமோ நம
நமஸ்தே த்வநந்தலக்ஷ்ம்யை மஹாலக்ஷ்ம்யை
நமோ நம

12. ஜபலக்ஷ்ம்யை தபோலக்ஷ்ம்யை வ்ரதலக்ஷ்ம்யை
நமோ நம
நமஸ்தே வைராக்யலக்ஷ்ம்யை மஹாலக்ஷ்ம்யை
நமோ நம

13. மந்த்ரலக்ஷ்ம்யை தந்தரலக்ஷ்ம்யை
யந்தரலக்ஷ்ம்யை நமோ நம
நமோ குருக்ருபாலக்ஷ்ம்யை மஹாலக்ஷ்ம்யை
நமோ நம

14. ஸபாலக்ஷ்ம்யை ப்ரபாலக்ஷ்ம்யை கலாலக்ஷ்ம்யை
நமோ நம
நமஸ்தே லாவண்ய்லக்ஷ்ம்யை மஹாலக்ஷ்ம்யை
நமோ நம

15. வேதலக்ஷ்ம்யை நாதலக்ஷ்ம்யை சாஸ்த்ரலக்ஷ்ம்யை
நமோ நம
நமஸ்தே வேதாந்தலக்ஷ்ம்யை மஹாலக்ஷ்ம்யை
நமோ நம

16. க்ஷேத்ரலக்ஷ்ம்யை தீர்த்தலக்ஷ்ம்யை
வேதிலக்ஷ்ம்யை நமோ நம
நமஸ்தே ஸந்தானலக்ஷ்ம்யை மஹாலக்ஷ்ம்யை
நமோ நம

17. யோகலக்ஷ்ம்யை போகலக்ஷ்ம்யை
யக்ஞலக்ஷ்ம்யை நமோ நம
க்ஷீரார்ணவ புண்யலக்ஷ்ம்யை மஹாலக்ஷ்ம்யை
நமோ நம

18. அன்னலக்ஷ்ம்யை மநோலக்ஷ்ம்யை
ப்ரக்ஞாலக்ஷ்ம்யை நமோ நம
விஷ்ணுவக்ஷோ பூஷலக்ஷ்ம்யை மஹாலக்ஷ்ம்யை
நமோ நம

19. தர்மலக்ஷ்ம்யை அர்த்தலக்ஷ்ம்யை காமலக்ஷ்ம்யை
நமோ நம
நமஸ்தே நிர்வாணலக்ஷ்ம்யை மஹாலக்ஷ்ம்யை
நமோ நம

20. புண்யலக்ஷ்ம்யை க்ஷேமலக்ஷ்ம்யை
ச்ரத்தாலக்ஷ்ம்யை நமோ நம
நமஸ்தே சைதன்யலக்ஷ்ம்யை மஹாலக்ஷ்ம்யை
நமோ நம

21. பூலக்ஷ்ம்யைதே புவர்லக்ஷ்ம்யை ஸீவர்லக்ஷ்ம்யை
நமோ நம
நமஸ்தே த்ரைலோக்யலக்ஷ்ம்யை
மஹாலக்ஷ்ம்யை நமோ நம

22. மஹாலக்ஷ்ம்யை ஜனலக்ஷ்ம்யை தபோலக்ஷ்ம்யை
நமோ நம
நம: ஸத்யலக்ஷ்ம்யை மஹாலக்ஷ்ம்யை நமோ நம

23. பாவலக்ஷ்ம்யை வருத்திலக்ஷ்ம்யை
பவ்யலக்ஷ்ம்யை நமோ நம
நமஸ்தே வைகுண்டலக்ஷ்ம்யை மஹாலக்ஷ்ம்யை
நமோ நம

24. நித்யலக்ஷ்ம்யை ஸத்யலக்ஷ்ம்யை
வம்சலக்ஷ்ம்யை நமோ நம
நமஸ்தே கைலாஸலக்ஷ்ம்யை மஹாலக்ஷ்ம்யை
நமோ நம

25. ப்ரகிருதி லக்ஷ்ம்யை ஶ்ரீலக்ஷ்ம்யை
ஸ்லஸ்திலக்ஷ்ம்யை நமோ நம
நமஸ்தே கோலோகலக்ஷ்ம்யை மஹாலக்ஷ்ம்யை
நமோ நம

26. சத்திலக்ஷ்ம்யை பக்திலக்ஷ்ம்யை முக்திலக்ஷ்ம்யை
நமோ நம
நமஸ்தே த்ரிமூர்த்திலக்ஷ்ம்யை மஹாலக்ஷ்ம்யை
நமோ நம

27. நமச்சக்ராஜல்க்ஷ்ம்யை ஆதிலக்ஷ்ம்யை நமோ நம
நமோ ப்ரும்மானந்தலக்ஷ்ம்யை மஹாலக்ஷ்ம்யை
நமோ நம

ஸ்ரீ ஸௌபாக்ய அஷ்டோத்ர சதநாமஸ்துதி த்யாநம்

பாலார்க்க அருண பத்மபீடநிலயாம்
வாமாதி சக்த்யா வ்ருதாம்
ஏலாகந்தி ஸீகுந்தளாம் த்விநயநாம்
ஹேமாம் பரா லங்க்ருதாம்
வாமேலம்பித தோர்லதாம் ஸீசரணாம்
தக்ஷேகரே இந்தீவராம்
ச்யாமாபாம் சரசிந்து சாரு வதநாம்
த்யாயேத் ஸீமீநே க்ஷணாம்

ஓம் பவஸ்ய தேவஸ்ய பத்னியை நம
ஓம் சர்வ்ஸ்ய தேவஸ்ய பத்னியை நம
ஓம் ஈசானஸ்ய தேவஸ்ய பத்னியை நம
ஓம் பசுபதேர் தேவஸ்ய பத்னியை நம
ஓம் ருத்ரஸ்ய் தேவஸ்ய பத்னியை நம
ஓம் உக்ரஸ்ய தேவஸ்ய பத்னியை நம
ஓம் பீமஸ்ய தேவஸ்ய பத்னியை நம
ஓம் மஹதோ தேவஸ்ய பத்னியை நம

ஸ்ரீ ஸௌபாக்ய அஷ்டோத்ர சத நாமாவளி

(ஒவ்வொரு நாமாவளிக்குமுன் 'ஓம்' என்றும் பின் 'நம' என்றும் சேர்த்து சொல்லவும்.)

1. ஓம் காமேச்வர்யை நம:
2. ஓம் காமசக்த்யை நம:
3. ஓம் காம ஸௌபாக்ய-தாயின்யை நம:
4. ஓம் காம-ரூபாயை நம:
5. ஓம் காம-கலாயை நம:
6. ஓம் காமின்யை நம:
7. ஓம் கமலாஸிந்யை நம:
8. ஓம் கல்பநாஹீநாயை நம:
9. ஓம் கமநீய-கலாவத்யை நம:
10. ஓம் கமலா-பாரதீ-ஸேவ்யாயை நம:
11. ஓம் கமலாயை நம:
12. ஓம் கல்பித அசேஷ ஸம்ஸ்ருதயே நம:
13. ஓம் அநுத்தராயை நம:
14. ஓம் அநகாயை நம:
15. ஓம் அநந்தாயை நம:
16. ஓம் அத்புத-ரூபாயை நம:
17. ஓம் அநலோத்பவாயை நம:
18. ஓம் அதிலோக-சரித்ராயை நம:
19. ஓம் அதி-ஸீந்தர்யை நம:
20. ஓம் அதி-சுப-ப்ரதாயை நம:
21. ஓம் அக ஹந்தர்யை நம:
22. ஓம் அதி விஸ்தாராயை நம:
23. ஓம் அர்ச்சநதுஷ்டாயை நம:

24. ஓம் அமிதப்ரபாயை நம:
25. ஓம் ஏக-ரூபாயை நம:
26. ஓம் ஏக-வீராயை நம:
27. ஓம் ஏக-நாதாயை நம:
28. ஓம் ஏகாந்தார்ச்சந-ப்ரியாயை நம:
29. ஓம் ஏகஸ்யை நம:
30. ஓம் ஏக-பாவ-துஷ்டாயை நம:
31. ஓம் ஏகரஸாயை நம:
32. ஓம் ஏகாந்த-ஜநப்ரியாயை நம:
33. ஓம் ஏதமாந-ப்ரபாவாயை நம:
34. ஓம் ஏதத்-பக்த-பாதக-நாசின்யை நம:
35. ஓம் ஏலா மோத முகாயை நம:
36. ஓம் ஏநோத்ரி சக்ராயுத ஸமஸ்தித்யை நம:
37. ஓம் ஈஹா-சூந்யாயை நம:
38. ஓம் ஈப்த்ஸிதாயை நம:
39. ஓம் ஈசாதி ஸேவ்யாயை நம:
40. ஓம் ஈசாந வராங்கநாயை நம:
41. ஓம் ஈச்வர-ஆக்ஞாபிகாயை நம:
42. ஓம் ஈகார-பாவ்யாயை நம:
43. ஓம் ஈப்ஸித-பல-ப்ரதாயை நம:
44. ஓம் ஈசாநாயை நம:
45. ஓம் ஈதி-ஹராயை நம:
46. ஓம் ஈக்ஷாயை நம:
47. ஓம் ஈஷத்-அருணாக்ஷ்யை நம:
48. ஓம் ஈச்வரேச்வர்யை நம:
49. ஓம் லலிதாயை நம:
50. ஓம் லலநா-ரூபாயை நம:
51. ஓம் லய-ஹீநாயை நம:
52. ஓம் லஸத்தநவே நம:

53. ஓம் லயஸர்வாயை நம:
54. ஓம் லயக்ஷேணாயே நம:
55. ஓம் லய-கர்த்ர்யை நம:
56. ஓம் லயாத்மிகாயை நம:
57. ஓம் லகிம்நே நம:
58. ஓம் லகுமத்யாட்யாயை நம:
59. ஓம் லலமாநாயை நம:
60. ஓம் லகுத்ருதாயை நம:
61. ஓம் ஹயாரூடாயை நம:
62. ஓம் ஹதாமித்ராயை நம:
63. ஓம் ஹரகாந்தாயை நம:
64. ஓம் ஹரிஸ்துதாயை நம:
65. ஓம் ஹயக்ரீவ-இஷ்டதாயை நம:
66. ஓம் ஹாலாப்ரியாயை நம:
67. ஓம் ஹர்ஷ-ஸமுத்பவாயை நம:
68. ஓம் ஹர்ஷணாய நம:
69. ஓம் ஹல்லீகா-பாங்க்யை நம:
70. ஓம் ஹஸ்த்யந்த ஐச்வர்ய தாயிந்யை நம:
71. ஓம் ஹலஹஸ்தார்சிதபதாயை நம:
72. ஓம் ஹவீர்-தாந-ப்ரஸாதிந்யை நம:
73. ஓம் ராமாயை நம:
74. ஓம் ராமார்சிதாயை நம:
75. ஓம் ராஜ்ஞ்யை நம:
76. ஓம் ரம்யாயை நம:
77. ஓம் ரவமய்யை நம:
78. ஓம் ரதயே நம:
79. ஓம் ரக்ஷிண்யை நம:
80. ஓம் ரமண்யை நம:
81. ஓம் ராகாயை நம:

82. ஓம் ரமணீ-மண்டல-ப்ரியாயை நம:
83. ஓம் ரக்ஷிதாகில-லோகேசாயை நம:
84. ஓம் ரேக்ஷா-கண-நிஷூதிந்யை நம:
85. ஓம் அம்பாயை நம:
86. ஓம் அந்தகாரிண்யை நம:
87. ஓம் அம்போஜ-ப்ரியாயை நம:
88. ஓம் அந்தக-பயங்கர்யை நம:
89. ஓம் அம்புரூபாயை நம:
90. ஓம் அம்புஜகராயை நம:
91. ஓம் அம்புஜ ஜாத வரப்ரதாயை நம:
92. ஓம் அந்தபூஜா ப்ரியாயை நம:
93. ஓம் அந்த ஸ்தரூபிண்யை நம:
94. ஓம் அந்தர் வசோமய்யை நம:
95. ஓம் அந்தகாராதி-வாமாங்க ஸ்திதாயை நம:
96. ஓம் அந்த ஸீகரூபிண்யை நம:
97. ஓம் ஸர்வஜ்ஞாயை நம:
98. ஓம் ஸர்வகாயை நம:
99. ஓம் ஸாராயை நம:
100. ஓம் ஸமாயை நம:
101. ஓம் ஸமஸீகாயை நம:
102. ஓம் ஸத்யை நம:
103. ஓம் ஸந்தர்யை நம:
104. ஓம் ஸந்ததாயை நம:
105. ஓம் ஸோமாயை நம:
106. ஓம் ஸர்வஸ்யை நம:
107. ஓம் ஸாங்க்யாயை நம:
108. ஓம் ஸநாதந்யை நம:

ஸ்ரீ ஸெளபாக்ய அஷ்டோத்ர சதநாமாவளி ஸம்பூர்ணம்